# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழ்ப் பத்திரிகையின் தந்தை எனப் பாராட்டப் பெற்றவர் யார்?
2. புண்ணியம் கோடி என்று பாரதியார் எதைச் சுட்டுகிறார்?
3. குயில் இரண்டாம் மூன்றாம் நாட்களில் யாது செய்தது?
4. காந்தியடிகளாரின் பெருமையைப் பாரதி எவ்வாறு வெளியிடுகிறார்?
5. ஆங்கிலக் கல்வியின் விளைவால் நேர்ந்த அவலம் யாது?
6. எட்டுத்திக்கும் செல்வது எதற்காக?
7. கல்வியை எந்த மொழியில் கொடுக்கவேண்டும் என்று பாரதியார் குறிப்பிடுகிறார்?
8. பாரதியிடம் பெண்ணுரிமைச் சிந்தனைகள் எழக்காரணமாக இருந்தவர் யார்?
9. உலகம் யாரால் உருவானது என்று பாரதிதாசன் கூறுகிறார்?
10. முதுகில் புண்பட்ட கணவனின் உடல் கண்டு கதிர்நாட்டு அரசன் மனைவி என்ன கூறுகின்றாள்?

11. வீரத்தாய் என்னும் காவியத்தில் மன்னன் மகன் சுர்மனைச் சேனாதிபதி எவ்வாறு வளரச்செய்தான்?
12. தமிழ் வளர்ச்சிக்குத் தடையாகப் பாரதிதாசன் எதை உணர்த்துகிறார்?
13. நற்றமிழர் சேர்த்த புகழ் யாது?
14. தமிழ் எப்போது தோன்றியது என்று பாரதிதாசன் பாடியுள்ளார்?
15. பாரதிதாசன் குறிப்பிடும் மூவகை வாழ்க்கை யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரத மக்களின் ஒற்றுமையைப் பாரதி எவ்வாறு வலியுறுத்துகிறார்?
2. குயிலின் முற்பிறவியில் நிகழ்ந்தது யாது?
3. பெண்களுக்கான உரிமைகளாகப் பாரதி கூறுவன யாவை?
4. பாரதியின் கவிதைகளைப் பற்றி எழுதுக.
5. புதுவை அரசு கொண்டிருந்த முற்போக்குத் திட்டங்கள் யாவை?
6. இரண்டு மூலிகைகளின் அற்புதங்களாகப் பாரதிதாசன் தெரிவித்திருப்பன யாவை?
7. தலைவியின் தமிழ் உணர்வை பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
8. மாமனாரின் கடமை உணர்வை பாரதிதாசன் எவ்வாறு குடும்ப விளக்கில் குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியார் பெண்விடுதலை, பெண்ணுரிமைச் சிந்தனைகளுக்கு வித்திட்டிருப்பதை அவர் படைப்புகளைக் கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பொதுநலப் பார்வையின் தீவிரத்தை அடையாளப்படுத்துக.

2. (அ) இந்திய விடுதலை இயக்கங்களில் ஈடுபாடுகொண்ட பாரதியின் அரசியல் வாழ்வை விவரி.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் கவிதைகளில் காணும் உணர்ச்சி வேகம், சொல்லாட்சி, வருணனைச் சிறப்பு ஆகியவற்றை விளக்குக.

3. (அ) பாரதியின் முப்பெரும் கோட்பாடுகளை இனங்கண்டு தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் இயற்கை வருணனையிலும் சமூகச் சிந்தனைகள் மிளிர்வதை எடுத்துரைக்க.

***